[1978 மார்ச் 15

தஞ்சை மாவட்ட வேளாண்மைத் தொழிலாளரது ஊதியங்கள்.

*507 — வினா திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தற்போது தஞ்சை மாவட்டத்தில் கீழ்த்தஞ்சை, மேலத்தஞ்சை எனப் பிரித்து, விவசாயத் தொழிலாளர்களுக்கு வெவ்வேறு வகை கூலி வழங்கப்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம், கிழக்கு தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம், சீர்காழி ஆகிய ஏழு வட்டங்களில் அமுல்படுத்தப்பட்டு கீழ்க்கண்டவாறு கூலி வழங்கப்படுகிறது:—

ஆடவர் .. ரூபாய் 6 அல்லது 6 லிட்டர் நெல்லுடன் ரொக்கம் ரூ. 2·75 பைசா.

பெண்டிர் .. ரூபாய் நான்கு அல்லது 5 லிட்டர் நெல்லுடன் ரொக்கம் ரூ. 1·50 பைசா.

அறுவடை காலங்களில் ஒவ்வொரு 54 லிட்டர் அறுவடைக்கும் 6 லிட்டர் நெல் கொடுக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மேலத் தஞ்சை உள்பட இதர பகுதிகளில் 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்படி கீழ்க்கண்டவாறு கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது:—

	வயது வந்தவர்கள்.		சிறியவர்கள்.	
	ரூ.	பை.	ரூ.	பை.
1. விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் மாடுகளுடனும், விவசாயக் கருவிகளுடனும் விவசாயத்தில் ஈடுபட்டால்.	9	00	..	
2. விவசாயிகள் தங்கள் மாடுகளையும், விவசாயக் கருவிகளையும் பயன்படுத்தாமல் விவசாயத்தில் ஈடுபட்டால்.	5	00	..	
3. விதைவிதைத்தல் போன்ற வேலைகளுக்கு.	5	00	3	00

	வயது வந்தவர்கள். ரூ.	பை.	சிறியவர்கள். ரூ.	பை.
4. நாற்று நடுதல், களை எடுத்தல் போன்ற வேலைகளுக்கு.	3	50	2	10
5. அறுவடை மற்றும் அது சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு.	5	00	3	00
6. வரப்புகளைச் செப்பனிடுதல், உரங்கள் சுமத்தல், தென்னை, பாக்கு மரங்களிலிருந்து காய்கள் பறித்தல் ஆகிய வேலைகளுக்கு.	5	00	3	00

திரு. ஏ. செல்லப்பன் : தலைவரவர்களே, கீழத்தஞ்சை விவசாயத் தொழிலாளர்கள் பெறுகின்ற கூலி ஏன் மேலத்தஞ்சை விவசாயத் தொழிலாளர் களுக்கும் கிடைக்கின்ற வாய்ப்பு இல்லாமல் போயின? அப்படி மேலத்தஞ்சை விவசாயத் தொழிலாளர்கள் என்ன பாவம் செய்தார்கள். இந்த அரசு முன் வந்து கீழ்த்தஞ்சை விவசாயத் தொழிலாளர்கள் பெறுவதைபபோல மேலத்தஞ்சை விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்தக் கூலி கொடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கீழத்தஞ்சையில் விவசாயத் தொழிலாளர்களுடைய போராட்டத்தின் விளைவாக குறிப்பாக 1967-68 ஆம் ஆண்டில் கணபதியா பிள்ளை என்பவர் தலைமையில் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டு அவர் விவசாயத் தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு கூலி நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்தார். அதையொட்டி 1969 ஆம் ஆண்டில் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்த சட்டத்தின்கீழ் விவசாயத் தொழிலாளர்களுடைய கூலி நிரணயிக்கப்படுகிறது. மற்ற பகுதிகளில் அதாவது மேலத்தஞ்சையில் மட்டுமல்ல மற்ற மாவட்டங்களிலும் ஒரே விகிதத்தில் கூலி கிடைப்பதற்கு வேறு சட்டத்தின்கீழ் அந்தக் கூலி நிர்ணயம் செய்யப்படவிருக்கிறது. ஆகவே இது ஒரு வரலாற்றினால் ஏற்பட்ட ஒரு வேறுபாடே தவிர வேண்டுமென்று செய்யப்பட்டதல்ல.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, ஒப்பந்தங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய கூலியிலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய கூலியிலும், நிர்ணயம் செய்த இடைக் காலம் அதிகமாக இருப்பதனால் மீண்டும் கூலி உயர்வு கேட்டு அடித்தளத்தில் இருக்கக்கூடிய மக்கள் கோரிக்கை வைத்திருப்பதனால் அது ஒரு தகராறு பிரச்சினையாக ஆக்காமல் இதற்கு தீர்வு காணுகின்ற வகையில் நெல்லாக

ஒரு பகுதி கூலி கொடுக்க வேண்டும் என்று கோரப்பட்டது. ஆக, இந்த இரண்டு காரணங்களுக்காக பிரச்சினை முற்றுவதற்கு முன்பாக ஒரு முத்தரப்பு மாநாடு கூட்டி பேசி முடிவு செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அத்தகைய உத்தேசம் தற்போது இல்லை.

திரு. கோ. இளங்கோவன்: 'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி, இவ்வையம் தழைக்குமாம்' என்று பாடினன் பாரதி. அதேபோல் ஆணுக்கு ஒரு கூலி பெண்ணுக்கு ஒரு கூலி என்ற நிலையை அகற்றி இருசாராருக்கும் பொதுவாக ஒரு கூலியை நிர்ணயிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பாரதி பாட்டு பாடும்பொழுது அவர் விவசாயம் செய்தாரா என்று தெரியவில்லை. ஆனால் ஆண்களானாலும் சரி பெண்களானாலும் சரி வயல்களில் வெவ்வேறான வேலைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. துரை. கோவிந்தராசன்: மேல் தஞ்சை மாவட்டத்தில் புன்செய் நிலங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், சிறிய விவசாயிகள் நடுத்தர விவசாயிகள் மேல் தஞ்சையில் அதிகமாக இருக்கிற காரணத்தாலும் அங்கே கூலி வேலை செய்கிறவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற இந்த கூலியை விட குறைவாகவே கிடைக்கிறது. ஆகவே, அதற்கு மேல் அதிகப்படுத்தினல் கூலி வேலை செய்கிறவர்களுக்கு கூலி கிடைக்காத நிலை ஏற்படும். இதை அரசு உணர்ந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆயினும் குறிப்பிட்ட கூலி விகிதத்தை விவசாயத் தொழிலாளர்கள் பெறுவதற்கு வழிவகை கட்டாயம் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 508.—

(திரு தாழை மு. கருணாநிதி உட்கார்ந்தபடி ஏதோ கூறினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து 234 பேர்களையும் வைத்துப் பார்க்க வேண்டும். ஒரு கேள்விக்கு மூன்று அல்லது ஐந்து நிமிடங்கள் தான் ஒதுக்க முடியும். தாழை மு. கருணாநிதியை மட்டும் பார்த்தால் போதாது. இருபது கேள்விகளை முடிக்க வேண்டும். இக்கேள்வியை விட்டு அடுத்த

1978 மார்ச் 15]

கேள்விக்கு போகும்போது தாழை மு. கருணநிதி உட்கார்ந்து கொண்டே பேசுவது நல்லதல்ல. நான் ஒவ்வொரு கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் தருகிறேன். அது தாழை கருணநிதியா அல்லது வேறு யாரோ என்பதல்ல. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வாய்ப்பு தந்திருக்கிறேன். அவர்கள்தான் கேட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இருபது பேர்கள் இருக்கிறார்கள், இருபது பேர்களும் இப்படி கேட்க ஆரம்பித்தால் என்னவாகும்? கேள்வி எண். 508.

ஸ்டாம்பு வெண்டர்கள் சங்கத்தின் முறையீடு.

*508—வினு திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா?

வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலூக்கா ஸ்டாம்பு வெண்டர்கள் சங்கத்தின் சார்பில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு 20—7—1977-ந் தேதி அன்று அனுப்பப்பட்ட மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மனுவில் உள்ள கோரிக்கைகள் வருவாய் வாரியத்தை கலந்தாலோசித்து பரிசீலிக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஏற்கனவே அவர்கள் எந்தளவிற்கு கமிஷன் பெற்றுக் கொண்டிருந்தார்கள்? அது எந்த ஆண்டில் பாதியாகக் குறைக்கப்பட்டது என்பதை அறிவிக்கமுடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1962-ம் ஆண்டுக்கு முன்பு ஒரு விதமான விகிதம் இருந்தது. அதற்குப் பிறகு அதைப் பற்றி ஆய்ந்து 1965ல் இருந்து புதிய விகிதங்கள் கொண்டு வரப்பட்டன. இந்தப் புதிய விகிதங்களை எதிர்த்து அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போனார்கள். ஹைகோர்ட்டில், இது செல்லாது அதற்கு ஒரு சட்ட திருத்தம் தேவை என்று குறிப்பிட்டார்கள். சட்டத் திருத்தமும் கொண்டுவரப்பட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதையும் எதிர்த்து உயர்நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். இருப்பினும் அவர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி வருவாய் வாரியம் பரிந்துரை செய்து வருகிறது. ஏற்கனவே சென்னையைப் பொறுத்த வரையில் 3 சதவிகிதம் என்று இருந்தது. இப்போது எல்லாயிடங்களுக்கும் $1\frac{1}{2}$ சதவிகிதம் என்று ஆகிறது. அதே போல் ஒவ்வொன்றுக்கும் ஷெட்யூல் இருக்கிறது. உறுப்பினர்கள் அவர்களுக்குத் தேவைப்பட்டால் அதை அவையில் வைக்கலாம்.